OS.No.:31/2017

நாள் : 26.02.2024

வா.சா. :3

பெயர் : ரெங்கசாமி

5, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இளநிலை கணித அறிவியல் பட்டம் படித்துள்ளேன். விவசாயம் செய்து வருகிறேன். 08.05.1964 என் பிறந்த தேதியாகும். என் மனைவி பெயர் பரிமளா. 1ம் பிரதிவாதி என் தாயார். வழக்கிற்கு பின்னர் 2020 ஆண்டில் இறந்துபோனார். கிருஷ்ணகுமார், வீராசாமி, ராஜமன்னார் என் உடன்பிறந்தவர்கள். என் தந்தை ராஜகோபால் உயில் ஆவணம் எழுதி வைத்திருந்தார். நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி. அசல் வழக்கில் எனக்கு அழைப்பாணை வரபெற்றது. நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி வழக்கை எதிர்கொள்ளவில்லை. எனக்கு வழக்கின் முழுவிவரமும் தெரியும். ராஜகோபால் எழுதி வைத்த உயில் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்ற வாதி தரப்பு வாதத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அந்த உயில் நடைமுறைக்கு வரவில்லை. அம்மா மீராபாய் உடன் சேர்ந்து நானும், என் சகோதரர்கள் மட்டும் ஒரு பாக பிரிவினை காரவோலை 2002 ஆம் ஆண்டு எழுதிக்கொண்டோம். வாதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நானும், என் தாயாரும் பதில் அறிவிப்பு அனுப்பினோம். அதில் உயில் பற்றிய விவரங்களை கூறவில்லை. 21.01.2011 தேதியில் விஜயலெட்சுமிக்கு ரூ. 1 லட்சமும் , வீராசாமிக்கு ரூ. 1,50,000/- பணம் கொடுத்தோம். பள்ளி நிர்வாகத்தை எனக்கு கொடுத்ததால் அதை கொடுத்துவிட்டோம். அதன் அடிப்படையில் என் தாயாரிடமிருந்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதபெற்றேன். என் தந்தையின் உயில்படி மீராபாய்க்கு கிடைக்கபெற்ற சொத்து என்றால் சரிதான். எனவே உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல. உயில்படி எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளில் ஏதேனும் நான் உரிமை மாற்றம் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. 2017 ஆம் ஆண்டு 2 ஏக்கர், 17 சென்ட் நிலத்தை கலியமூர்த்திக்கு நான் விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணகுமார், வீராசாமி,

ராஜமன்னார் ஆகியோர் விற்றுள்ளார்கள் என்றால் சரிதான். உயில் ஆவணத்தின் அடிப்படையில் விற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. பாக கரவோலையின் அடிப்படையில் விற்றுள்ளனர். 5, 7 பிரதிவாதிகளின் சொத்துக்களை அபகரிக்கும் நோக்கத்துடன் நானும், வாதியும் கூட்டாக மோசடி செய்து தயாரித்த கரவோலையை உறுதிப்படுத்துவற்காக நான் அசல் வழக்கில் ஒருதரப்பான போதிலும், வாதிக்கு ஆதரவாக வாதி தரப்பு சாட்சியாக நீதிமன்றம் ஆஜராகியுள்ளேன் என்றால் சரியல்ல. கரவோலை மோசடியானது என்றும், அதற்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.